
வெளி
கலை, கலாசார பீடம்
கிழக்குப் பல்கலைக்கழகம், மட்டக்களப்பு.

# புதிய சர்வதேச ஒழுங்கின் பின்னரான பிராந்திய தலையீடுகள் - ஓர் கோட்பாட்டு விளக்கம்

திரு. த. கிருஷ்ணமோகன்
விரிவுரையாளர்
சமூக விஞ்ஞானத்துறை

## I அறிமுகம் :-

முதலாம் உலகப் போரின் பின்னர் பாதுகாப்புடன் தொடர்புடைய பல்வேறு விடயங்களையும் தீர்ப்பதற்கு சர்வதேச சமூகம் முயற்சித்து வருகிறது. ஆயினும், 1ம் உலகப் போரின் பின்னர் எழுச்சியடைந்த வல்லரசுகளுக்கிடையில் காணப்பட்ட ஒற்றுமையின்மையால் இம்முயற்சி பல்வேறு பின்னடைவுகளை சந்தித்தது. உலக சமாதானத்தினை அடையும் நோக்கில் சமாதான விரும்பிகளால் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் உருவாக்கப்பட்டபின்னர், உலக சமாதானத்தினை அடையும் முயற்சியில் பல வெற்றிகள் கிடைத்திருந்தன. அதேநேரம் 2ம் உலகப் போரின் பின்னர் பல பிராந்திய பாதுகாப்புக் கூட்டமைப்புக்கள் உருவாக்கப்பட்டன. இப்பிராந்திய பாதுகாப்புக் கூட்டமைப்புக்கள் இராணுவ அமைப்புக்களையும், பிராந்திய வல்லரசுகளையும் உருவாக்கியதுடன், பிராந்திய வல்லரசுகள் இராணுவ அமைப்புக்களூடாக பிராந்தியத்தின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தவும் முற்பட்டன. இப்பண்பின் வளர்ச்சி பிராந்திய வல்லரசுகள் தமது தேசிய நலன் கருதி ஏனைய நாடுகளின் உள்விவகாரங்களில் தலையீடு (Intervention) செய்கின்ற கலாசாரத்தினை வளர்த்திருந்தது. சோவியற் யூனியனின் வீழ்ச்சியுடன் முடிவிற்கு வந்த கெடுபிடியுத்த சூழல் புதிய சர்வதேச ஒழுங்கினை தோற்றுவித்தது. பிராந்திய வல்லரசு என்ற நிலையிலிருந்து உலகின் தனிப்பெரும் வல்லரசாக ஐக்கிய அமெரிக்கா தன்னை உயர்த்திக் கொண்டது. அத்துடன், உலகப் பாதுகாப்பு, சமாதானம், மனிதஉரிமைகளைப் பாதுகாக்கும் ஏகப் பிரதிநிதியாகவும் தன்னைத் தானே பிரகடனப்படுத்தியும் கொண்டது. இப் புதிய பரிமாணம் பிராந்திய இராணுவக் கூட்டுக்களுடன் ஐக்கிய அமெரிக்கா தன்னை இணைத்துக் கொள்வதில் இருக்கக் கூடிய நலன் சார்ந்த தந்திரோபாயப் பிரச்சினைகளை உணர்ந்து செயற்பட வேண்டிய நிர்ப்பந்தத்தினை ஏற்படுத்தியது. மறுபக்கத்தில் பிராந்தியக் கூட்டமைப்புக்கள் தமக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை ஐக்கிய அமெரிக்காவின் உதவியின்றி சுயமாக பெற்றுக்கொள்ள முயற்சிக்கின்றன. அத்துடன் பிராந்திய முரண்பாடுகளை பிராந்தியத்திற்குள்ளேயே தீர்த்து வைப்பதில் பிராந்தியக் கூட்டமைப்புக்கள் முக்கிய பங்கு வகிக்கத் தொடங்கின. இந்நிலையில் இக்கட்டுரை 1990 களின் ஏற்பட்ட புதிய சர்வதேச ஒழுங்கின் பின்னர் (New World Order) தலையீடுகளை ஏன் பிராந்தியக் கூட்டுக்கள் விரும்புகின்றன? பிராந்தியக் கூட்டுக்களின் அமைப்பு ரீதியான செயற்பாடுகள் எவை? தலையீட்டுக்கான தந்திரோபாய நோக்கங்கள் என்ன? போன்ற விடயங்கள் ஆய்வுக்கு உட்படுத்துகின்றது.

## II தலையீடு என்றால் என்ன?

புராதன காலத்திலிருந்து உலகம் தலையீட்டினை சந்தித்து வந்துள்ளதனை வரலாறு எடுத்துக்காட்டுகின்றது. சில தவிர்க்க முடியாத சூழ்நிலையின் கீழ் ஒரு அரசு அல்லது சில அரசுகள் பிறிதொரு சுதந்திர அரசின் உள்விவகாரங்களில் தலையீடு செய்ய வேண்டி ஏற்படலாம். ஆகவே தலையீடு என்றால் என்ன என்பதை தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும். Jackson என்பவரின் கருத்துப்படி தலையீடு என்பது

"ஒரு அரசுமீது பிறிதொரு அரசு மேற்கொள்ளும் சர்வாதிகார வன்முறையாகும். இத்தலையீட்டின் அடிப்படை சாராம்சம் பலாத்காரம் அல்லது பலத்தினால் பயமுறுத்துவதாகும் எனக்கூறுகின்றார்".

Lawrence Freedman என்பவரின் கருத்துப்படி இரண்டு கருத்துக்களில் பயன்படுத்தப்படுகின்றது. ஒன்று வெளிநாடுகளால் மேற்கொள்ளப்படும் தலையீடு இரண்டாவது சமாதானத் தீர்விற்கான தலையீடாகும். இரண்டாவது தலையீட்டிற்கான நோக்கத்திற்குள் மனிதாபிமான

உதவியும் உள்ளடங்கியிருக்கும். இவ்விரண்டு வரைவிலக்கணங்களும் சர்வதேச நாடுகளின் மாறும் அரசியல் அந்தஸ்து, நீடித்துச் செல்லும் அதிகாரம் என்பவைகளால் தீர்மானிக்கப்படுவதாகவும் கூறப்படுகின்றது. ஐக்கிய நாடுகள் சாசனம் ஐ.நா தலைமையில் சமாதானத்தை நோக்கமாகக் கொண்டு தலையீட்டினை ஆதரிக்கின்றது. ஐ.நா சாசனத்தின் அத்தியாயம் VII சரத்து 51

"அங்கத்துவ நாடு ஒன்றிற்கு எதிராக ஆயுதத் தாக்குதல் நிகழ்ந்தால் சர்வதேச பாதுகாப்பு, சமாதானம் என்பவற்றைப் பேணும் நோக்கில் பாதுகாப்புச் சபை இதற்கு எதிராக நடவடிக்கைகளில் ஈடுபட முடியும்" எனக் கூறுகின்றது.

முன்னை நாள் ஐ. நாவின் பொதுச் செயலாளர் Boutros - Boutros - Ghali தலையீடு தொடர்பாக பின்வருமாறு கூறுவதும் நோக்கத்தக்கது.

"சாசனங்களுடாக சமாதானத்தினை வரைவிலக்கணப்படுத்திவிட முடியாது. படிப்படியாக வெளிப்படும் கட்டாயப்படுத்தல்கள் முரண்பாடுகளை தோற்றுவிக்கின்றபோது சாசனங்களுக்கு இணங்க பாதுகாப்புச்சபை பயன்தரக்கூடிய நடவடிக்கைகளில் ஈடுபடுவதை கெடுபிடியுத்தச் சூழல் தடுத்து வந்தது. சாசனத்தின்படி சமாதானம் என்பது கட்டாயப்படுத்தப்படுகின்றது. இதற்கு இணங்க யாராவது சர்வதேச சட்டத்தினை மீறினால் அதற்கெதிராக ஐ.நா படைப்பலத்தினை பயன்படுத்தி தலையீடு செய்து அமைதியை ஏற்படுத்த முடியும்."

## III தலையீட்டிற்கான நோக்கங்கள்:-

இரண்டாம் உலகப்போரின் பின்னர் வெளிச் சக்திகளின் தலையீடின்றி பிராந்திய முரண்பாடுகளுக்குச் சமாதானத் தீர்வினை அடைவதற்கு தலையீடுகளை மேற்கொள்ளுதல் என்ற தந்திரோபாயம் பயன்படுத்தப்பட்டது. தற்காலத்தில் ஐ.நாவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட சர்வதேச சட்டவிதிகளுக்கிணங்க தலையீடுகள் நியாயப்படுத்தப்படுகின்றன. இதனை அடிப்படையாகக் கொண்டு குறிப்பிட்ட பிராந்திய வல்லரசொன்று அல்லது பிராந்தியக் கூட்டமைப்பு ஒன்று பிற அரசுகளின் மீது தலையீடுகளை மேற்கொள்கின்றன. இதனால் தேசிய அரசுகளின் இறைமை, சுயாதிபத்தியம், தன்னாதிக்கம் என்பன மீறப்படுகின்றன. ஐ.நா பல பிராந்திய முரண்பாடுகளில் நேரடியாகவே தொடர்புபடுகின்றது. பிராந்திய இராணுவக் கூட்டுக்கள் அல்லது சில அங்கத்தவர்கள் ஐக்கிய நாடுகளின் அங்கீகாரத்துடன் நேரடியாகவே தலையீடுகளை மேற்கொள்கின்றன. உதாரணமாக 1990ம் ஆண்டு வளைகுடாப் போர், 1994ம் ஆண்டின் ஹெயிட்டி (Haiti) மீதான இராணுவத் தலையீடு போன்றன ஐக்கிய நாடுகளின் அங்கீகாரத்துடன் ஐக்கிய அமெரிக்காவினால் மேற்கொள்ளப்பட்டன.

தலையீட்டிற்கான அடிப்படை நோக்கம் சமாதானமாகும். ஐக்கிய நாடுகளின் தற்காலக் கொள்கை சர்வதேச சமாதானத்தினை அடைவதாகும். உலகநாடுகளின் பொருளாதார விருத்திக்கு அரசியல் உறுதிப்பாடு, சமாதானம் என்பன அவசியமானதாகும். ஆனால் வல்லரசுகள் தமது அந்தஸ்த்தினை தொடர்ந்து சர்வதேச அளவில் பேணுவதன் மூலம் அரசியல், பொருளாதார நன்மைகளை பேணி வருகின்றன. வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் ஏற்படும் இனமுரண்பாடு, சமூக ஏற்றத்தாழ்வுகள், உள்நாட்டு மட்டத்தில் ஏற்படும் உறுதியற்ற தன்மை என்பன அகதிகள் பிரச்சினைகளை தோற்றுவித்துள்ளன. அதே நேரம் வளர்ச்சியடைந்த நாடுகளில் செல்வாக்குச் செலுத்தி வரும் வெகுஜன தொடர்பு சாதனங்கள் மனித உரிமைகளை அயல்நாடுகள் மதித்து நடப்பதன் மூலமே சமாதான சமுதாயமொன்றை உருவாக்க முடியும் என்ற கருத்தினை உருவாக்கி வருகின்றன. இந்நிலையில் ஐக்கிய நாடுகள் ஸ்தாபிக்கப்பட்ட போது ஏற்றுக் கொள்ளப்பட்ட கொள்கைகளுக்கிணங்க வளர்ச்சியடைந்து வரும் நாடுகளுக்கு மனிதாபிமான உதவிகளை ஐ.நாடுகள் வழங்க வேண்டும். ஆனால் உண்மை யாதெனில் ஐக்கிய நாடுகளின் செயற்பாடானது வல்லரசுகளின் தேசிய நலன்களுடன் தொடர்புடைய விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து செயற்படுவதாகவே உள்ளது.

## IV முடிவுரை :-

உலகப் பொருளாதாரமானது பிராந்திய முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக மாறிவருகின்றது.

அதே நேரம் பாதுகாப்பு என்பதும் பிராந்திய அரசியலுக்கூடாகவே நோக்கப்படுகின்றது. பிராந்திய ஒழுங்கமைப்பானது கோட்பாட்டு நிலையில் அனுகூலம் வாய்ந்ததாயினும் பல பிரதிகூலங்களையும் கொண்டுள்ளன. இப்பிரதிகூலங்களே பிராந்திய ஒழுங்கமைப்பிலுள்ள பலவீனங்களாகும். இது பிராந்திய ஒழுங்கமைப்புக்களுக்கு மாத்திரமன்றி சர்வதேச ஒழுங்கமைப்புக்களுக்கும் பொதுவானதாகும். நீண்டகாலத்தில் பொதுவான இப்பிரதிகூலங்கள் சீர்படுத்தப்படாவிட்டால் பிராந்திய ஒழுங்மைப்புக்கள் கோட்பாட்டளவில் மாற்றியமைக்கப்பட வேண்டியிருக்கும். இதுவே சர்வதேச ஒழுங்கமைப்புக்களுக்கும் நிகழக்கூடியதாகவிருக்கும். தந்திரோபாய நோக்கில் இராணுவத்தினை பயன்படுத்துதல் என்பது கேள்விக்குள்ளாக்கப்பட்டால் எதிர்காலத்தில் வன்முறை ஏற்படும்போக்கு அதிகரிக்கப்படலாம் என தாராண்மைவாதிகளும், யதார்த்தவாதிகளும் வாதிடுவது கவனத்தில் கொள்ளத்தக்கது. வன்முறையினை மேற்கொள்ளும் தந்திரோபாயம் கோட்பாட்டு ரீதியில் படிப்படியாக இராணுவப்பயன்பாடு தொடர்பான போக்கினையே கொண்டிருக்கும். இதனால் தேசிய அரசுகளின் இறைமை என்பது கேள்விக்குள்ளாகும். தாராண்மைவாதிகளும், யதார்த்தவாதிகளும் தேசிய பாதுகாப்பு பிராந்திய முரண்பாடுகளால் ஏற்படும் மனித உரிமை மீறல்களை சர்வதேச அளவில் நிராகரிக்க முடியாதிருக்கும் எனக் கூறுவது கவனத்தில் கொள்ளத்தக்கதாகும்.

## REFERENCE


1. Freed man, Lawrence (Ed), "Introduction", Military Intervention in European Conflicts, Black well, Oxford, U.K.1994.

2. Little, Richard, Intervention - External Involvement in Civilwar, Rowmand and Little field, Totowa, NJ,1975

3. Mc Coubrey, Hilaire and Nigel D. white, International Organizations and Civil Wars Dartmouth, Albershot, U.K. 1995.

4. Ghali, Boutros, Boutrous, Em Powering the United Nations, Foreign affairs, Winter, 1992-1993.